

சிவகங்கை மாவட்டக் கழகச் துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ தனது மகன் நடிகர் நிஷாந்த்ரூசோ, சினேகா கேத்தரின் ஆகியோரின் திருமண அழைப்பிதழை கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மருமகன் ராஜா ஸ்டீபன், மகள் ஜெம்மா நிப்பிளா, பேரன் ரூசோ ஆகியோர் உள்ளார்கள்.



திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் செயற்குழு கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரை ஆற்றினார். உடன் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம். எல். ஏ ஆகியோர் உள்ளனர்.

### 2024 ஆம் ஆண்டிற்கான

# தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு விண்ணப்பித்திட கால அவகாசம் நீட்டிப்பு!

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண் இயக்குநர் சி.சமயமூர்த்தி அறிவிப்பு!

சென்னை, ஆக.21-

நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது. சுற்றுலாப் பயணிகள் பலதரப்பட்ட அனுபவங்களை பெறுவதற்கு பொழுதுபோக்கு, சாகச விளையாட்டுகள், நடனம், இசை, திருவிழாக்கள், உணவு வகைகள், கல்வி, ஆரோக்கியம் மற்றும் வணிகம் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றுடன், சுற்றுலாவின் தேவை கணிசமாக அதிகரித்துள்ளது.

சுற்றுலாவில் வெற்றியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் புதிய உத்திகளை கையாள்பவர்களுக்கு தமிழக சுற்றுலாத்துறை சுற்றுலா விருதுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. மூன்றாவது ஆண்டாக வழங்கப்படும் இவ்விருதுகள் ஆண்டுதோறும் உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 27.09.2024 அன்று வழங்கப்படவுள்ளன. இவ்விருதுகள் சுற்றுலா தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கவும், மாநிலத்தில் பல்வேறு சுற்றுலா பங்குதாரர்களிடையே சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்க வழிவகுக்கும்.

விருதுகளின் வகைப்பாடுகள்:

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர் (*Best Inbound Tour Operator*)

சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர் (*Best Domestic Tour Operator*)

சிறந்த பயண பங்குதாரர் (*Best Travel Partner*)

சிறந்த விமான பங்குதாரர் (*Best Airline Partner*)

சிறந்த தங்குமிடம் (*Best Accommodation*)

சிறந்த உணவகம் (*Best Restaurant*)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த உணவகம், தங்குமிடம் மற்றும் படகு இல்லம் (*Tamil Nadu Tourism Development Corporation Star Performer*)

சுற்றுலா ஊக்குவிப்பிற்கான சிறந்த மாவட்டம் (*Tourism Promotion Award (Best District)*)

சுத்தமான சுற்றுலாத்தலம் (*Cleanest Tourism Destination*)

பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர் (*Best Niche Tourism Operator*)

சிறந்த சாகச மற்றும் தங்கும் முகாம்கள் சுற்றுலா ஏற்பாட்டாளர் (*Best Adventure Tourism and Camping site Operator*)

சிறந்த MICE சுற்றுலா அமைப்பாளர் (*Best Meetings Incentives Conference and Exhibition (MICE) Organizer*)

சமூக ஊடகங்களில் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்துபவர் (*Best Social Media Influencer*)

சிறந்த சுற்றுலா வழிகாட்டி (*Best Tourist Guide*)

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா விளம்பரம் (*Best Advertisement on Tamil Nadu*)

சுற்றுலாவினை பிரபலபடுத்தும் வகையில் சிறப்பாக விளம்பரபடுத்துதல் (*Best Tourism Promotion Publicity Material*)

சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் (*Best Educational Institution for Tourism and Hospitality*)

மூன்றாவது தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் -2024க்கான விண்ணப்பத்தினை www.tntourismawards.com என்ற இணையதளத்தில் உள்ள உரிய படிவத்தில் பூர்த்தி செய்து 20.08.2024-க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்ட நிலையில், விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதியினை நீட்டித்து 26.08.2024க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமய மூர்த்தி அறிவித்துள்ளார்.

### கலைஞர் நூற்றாண்டையொட்டி - 'என் உயிரிலும் மேலான...!' எனும் தலைப்பில்

# காரைக்குடியில் மாணவ - மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமை! நாகனி செந்தில்குமார் அறிவிப்பு!

சிவகங்கை, ஆக. 21-

சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் பேரில் மாநில இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உத்தரவின் பேரில் மாணவ மாணவிகளுக்கு பேச்சாற்றல் திறனை உருவாக்கும் வகையில் என் உயிரினும் மேலான என்ற தலைவர் கலைஞர் குறித்த பேச்சுப் போட்டி மாவட்டம் தோறும் நடைபெற்று வருகின்றது.

இதன்படி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட இளைஞரணி சார்பில் வருகிற 25 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் காரைக்குடி அபூர்வா திருமண மஹாலில் என் உயிரிலும் மேலான என்ற கலைஞர் குறித்த கல்லூரி மாணவ மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலையில் இந்த பேச்சுப் போட்டிகள் நடைபெறுகிறது.

நான் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார்) வரவேற்றுப் பேசுகிறேன்.

இந்த பேச்சுப் போட்டியில் மாவட்டம் முழு வதிலும் இருந்து கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்று பேசுகிறார்கள். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் தலைமையில் இளைஞரணி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

இந்த போட்டிகளில் ஏற்கனவே விண்ணப்பித்த மாணவ - மாணவிகளுக்கு தனித்தனியே போட்டி குறித்த அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. அன்றைய தினம் பேச்சுப் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ - மாணவிகள் காலை 9 மணிக்குள் அபூர்வ திருமண மகாலிற்கு வருகை தந்திடுமாறு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

### கசவனம்பட்டி - கே.குரும்பபட்டியில் ரூ.40 லட்சத்தில்

# பேவர்பிளாக் சாலை, வடிகால்வசதி, நாடக மேடை புதுப்பிப்பு!

## அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு!

திண்டுக்கல், ஆக.21 -

கசவனம்பட்டி ஊராட்சி கே.குரும்ப பட்டி கிராமத்திற்கு ரூ.40 லட்சம் மதிப்பில் பேவர்பிளாக் சாலை, வடிகால்வசதி, நாடக மேடை புதுப்பித்து கொடுத்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கசவனம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கே.குரும்பபட்டியில் வசிக்கும் மக்கள் தங்கள் கிராமத்திற்கு பேவர் பிளாக் சாலை, வடிகால்வசதி, நாடகமேடை வசதி கோரி தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி யிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக அப்பகுதியில் குறிப்பாக காளியம்மன் கோவில் வளாக பகுதியில் 14 லட்சம் மதிப்பில் பேவர்பிளாக் கற்கள் சாலையும், ஏ.ஜி.எம்.டி. திட்டம் மூலம் 11 லட்சம் மதிப்பில் வடிகால் வசதியும் குரும்பபட்டியில் உள்ள கவுண்டர் தெருவிற்கு என்.ஆர்.ஜி.இ.எஸ். திட்டம் மூலம் ரூ.16 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் கற்கள் சாலை அமைக்கவும் உத்தரவிட்டார் அதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று நிறைவுற்று வருகிறது.

குரும்பபட்டி கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று 40லட்சம் மதிப்பில் நலத்திட்ட பணிகளை வழங்கிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு குரும்பபட்டி கிராம மக்கள் மனதார பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.சக்தி, பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டதோடு ஆலோசனையும் வழங்கினார்.

இது குறித்து ஊராட்சி மன்ற தலைவர் கே.சக்தி கூறுகையில், கடந்த 3 வருடங்களுக்கு தி.மு.க. ஆட்சி வருவதற்கு முன்பு நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் 10 வருடங்களாக எங்கள் கிராமத்தில் எந்த ஒரு நல திட்ட பணியும் முறையாக செய்யவில்லை. வரம் கொடுக்கும் தெய்வம் போல் நாங்கள் கேட்ட அனைத்து நலத்திட்ட உதவிகளையும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எங்கள் ஊராட்சிக்கு வழங்கியதோடு தற்போது நாடக மேடையை சொந்த செலவில் புதுப்பித்துக் கொடுத்துள்ளார். இது தவிர சமுதாய கூடத்தையும் புதிதாக கட்டித்தர உறுதியளித்துள்ளார். எங்கள் கிராம மக்கள் என்றும் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்றார்.

### நெல்லை மாநகரத்தில் - 4 நாட்களுக்கு

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி உறுப்பினர் சேர்க்கை!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.ஆக.21-

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாநகர மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி ஏற்பாட்டில் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் 21.08.2024,22.08.2024,23.08.20248,26.08.2024 ஆகிய 4 நாட்கள் நடைபெறுகிறது. என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது. கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் - உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோரின் அறிவுறுத்தலின்படி

நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை)சாகுல் ஹமீது (மேலப்பாளையம்) ஆகியோர் மற்றும் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நெல்லை மாநகர மகளிர் அணி மற்றும் மாநகர மகளிர் தொண்டர் அணி ஆகியோரின் ஏற்பாட்டில் மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நடைபெறும் இடங்கள் வருமாறு.

இன்று( 21.08.2024-புதன்கிழமை) மாலை 5 மணி வார்டு 16 நெல்லை பேட்டை பகுதி உழவர் சந்தைடவுண்,

22.08.2024 வியாழக்கிழமை மாலை 5 மணி வார்டு 49 மேலப்பாளையம் பகுதி மாநகராட்சி மண்டபம் மேலப்பாளையம்,

23.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி வார்டு 12 தச்சை பகுதி செல்வி அம்மன் கோவில் சமுதாய நலக்கூடம் மேகலிங்கபுரம், 26082024 திங்கட்கிழமை மாலை 5 மணி வார்டு 34 பாளை பகுதி சமுதாய நலக்கூடம் சமாதானபுரம், மிலிட்டரி லைன் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

ஆகவே அந்தந்த பகுதிக்கு உட்பட்ட மாநகரக் கழக,பகுதி கழக,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இன்று பராமரிப்பு பணிக்காக மின் விநியோகம் நிறுத்தப்படும் பகுதிகள்!

## மின் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஆக 21-

இன்று 21.08.2024 புதன்கிழமை பராமரிப்பு பணிக்காக மின்நிறுத்தம்

சென்னையில் 21.8.2024 அன்று காலை 09.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை மின்வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ் காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மதியம் 2.00 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின்விநியோகம் கொடுக்கப்படும்.

அடையாறு : 4வது பிரதான சாலை காந்தி நகர், 2வது மற்றும் 3வது கிரசண்ட் பார்க் சாலை, 3வது பிரதான சாலையின் ஒரு பகுதி

ஹஸ்தினாபுரம் : ஆர். பி. சாலையின் ஒரு பகுதி, அண்ணாசாலை, காயத்ரி நகர், வேல்முருகன் நகர், வினோபாஜி நகர், கிருஷ்ணா நகர், புவனேஸ்வரி நகர், பாஷ்யம் நகர், மாணிக்கம் நகர், பி.பி.ஆர். தெரு.

மடிப்பாக்கம் : ஷீலா நகர், அன்னை தெரசா நகர், சதாசிவம் நகர், கோவிந்தசாமி நகர், ராஜாஜி நகர், ராம் நகர் (எஸ்), குபேரன் நகர், மகாலட்சுமி நகர், ராம் நகர் (என்), ராஜராஜேஸ்வரி நகர், பஜனை கோயில் தெரு, பெரியார் நகர், குளக்கரை தெரு, அண்ணா நகர், ராஜலட்சுமி நகர்.

அம்பத்தூர்: சிட்கோ தொழிற்பேட்டை, ஈபி சாலை 1வது தெரு, அப்பாசாமி சாலை, வடக்கு கட்டத்தின் 9வது மற்றும் 10வது தெரு, 7வது மற்றும் 8வது தெரு டாஸ் எஸ்டேட், மகாத்மா காந்தி சாலை, வடக்கு கட்டத்தின் 6 முதல் 9வது தெரு.

அத்திப்பட்டு : ஜுவாரி சிமெண்ட்ஸ், அத்தானி கன்டெய்னர் டெர்மினல் லிமிடெட், வடசென்னை நிலை 4 பி.எச்.இ.எல். தளம், இந்தியன் ஆயில் எல்.என்.ஜி. லிமிடெட், L&T ஷிப் பில்டிங், வடசென்னை நிலை 1 துணை மின்நிலையம்.

சோத்துபெரும்பேடு : நெற்குன்றம், சோத்துபெரும்பேடு ஒரு பகுதி, செக்கஞ்சேரி, அட்டப்பாளையம், கன்னியம் பாளையம், பசுவன் பாளையம், ஞாயிறு கிராமம், மஃபுஷ் கான்பேட்டை.



விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் 253 வது நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டம் பச்சேரி கிராமத்தில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவிடத்தில் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.,ராணி ஸ்ரீகுமார், எம்.பி.சதன், திருமலைகுமார் எம்.எல்.ஏ., ஒன்றியக் குழு தலைவர்கள் பொன். முத்துராமலிங்கம், (வாசுதேவநல்லூர்)லாலா சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் பூசைப் பாண்டியன்,பெரியதுரை, நகர செயலாளர் பிரகாஷ்,பேரூர் செயலாளர்கள் ரூபி பாலசுப்பிரமணியன், கே.டி.சி குருசாமி, டாக்டர் செண்பக விநாயகம் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலர்களின் ஆய்வு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாடு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.